# BHISHM க்யூப்ஸை உக்ரைன் நாட்டிற்கு இந்திய பிரதமர் வழங்கினார்

ஆகஸ்ட் 23, 2024

இந்திய பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் 2024 ஆகஸ்ட் 23 அன்று உக்ரைன் அரசுக்கு நான்கு BHISHM (பாரத் ஹெல்த் இனிஷியேட்டிவ் ஃபார் சஹ்யோக் ஹிதா & மைத்ரி) கியூப்களை வழங்கினார். உக்ரைன் அதிபர் திரு. வோலோடிமிர் ஜெலென்ஸ்கி அவர்கள் இந்த மனிதாபிமான உதவிக்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்தார். இந்த க்யூப்ஸ் காயமடைந்தவர்களுக்கு விரைவான சிகிச்சை அளிக்கவும், விலைமதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்றவும் உதவும்.

2. ஒவ்வொரு BHISHM க்யூபிலும், அனைத்து வகையான காயங்கள் மற்றும் மருத்துவ சூழ்நிலைகளுக்கான முதன்மையான பராமரிப்புக்கான மருந்துகள் மற்றும் உபகரணங்கள் உள்ளன. ஒரு நாளைக்கு 10-15 அடிப்படை அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ளக்கூடிய ஒரு அடிப்படை அறுவை சிகிச்சை அறைக்கான அறுவை சிகிச்சை உபகரணங்களும் இதில் அடங்கும். மேலும் அதிர்ச்சி, இரத்தப்போக்கு, தீக்காயங்கள், எலும்பு முறிவுகள் போன்ற அவசரகால சூழ்நிலைகளில் பல்வேறு இயல்புடைய சுமார் 200 நிகழ்வுகளைக் கையாளும் திறனை க்யூப் கொண்டுள்ளது. இது அதன் சொந்த ஆற்றலையும் ஆக்ஸிஜனையும் குறைந்த அளவுகளில் உருவாக்க முடியும். கியூபை இயக்குவதற்காக உக்ரைன் தரப்பிற்கு ஆரம்பகட்ட பயிற்சியை வழங்க இந்தியாவிலிருந்து நிபுணர்கள் குழு அனுப்பப்பட்டுள்ளது.

3. உக்ரைனுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கும் இந்தியாவின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை இந்த செயல் எடுத்துக்காட்டுகிறது.

**கீவ்**
**ஆகஸ்ட் 23, 2024**